# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
# அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2026

## பேச்சு 2014 ஆம் ஆண்டு பிறந்த மாணவர்கள்

**வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவார்கள்.**

## அன்னை பூபதி

மீன்பாடும் தேன் நாடாம் மட்டு நகரின் ஆரையம்பதியிலே அன்னை பூபதி பிறந்தார். மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணியின் தீவிர செயற்பாட்டாளராகச் செயற்பட்டு வந்தார்.

இந்தியப்படைகள் தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை அழித்தொழிக்கும் வன்முறையில் இறங்கியது. அப்போது இந்தியப்படை உடனடியாகப் போரை நிறுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இதனை வலியுறுத்தி, அன்னை பூபதி அவர்கள் 19.03.1988 அன்று தனது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

ஆனால், இந்திய அரசு அன்னையின் சாத்வீகப் போராட்டத்தைக் கவனத்தில் கொள்ளவில்லை. அவரின் கோரிக்கைகளையும் செவிசாய்க்கவில்லை. மாறாக இந்தியப்படைகள் தமிழர் நிலப்பரப்பை சுடுகாடாக்கியது. இறுதியில், காந்தி தேசம் 19.04.1988 அன்று அன்னையின் உயிரைப் பறித்தது.

அன்னை, தமிழ் இனத்தின் விடிவுக்காகவும், இராணுவத்திற்கு எதிராகவும், உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடாத்திய பெருமைக்குரியவர். ஒரு குடும்பப்பெண் தனது வாழ்வைத் துறந்து, தனது இனத்திற்காக முன்னெடுத்த உண்ணாவிரதப் போராட்டம் என்று கூறின் மிகையாகாது! குடும்பத் தலைவியான இவர், தன்னை தன் மக்களுக்காக தற்கொடையாக்கிய செயல், ஒரு வரலாற்று நிகழ்வு.

எம் சுதந்திர வாழ்விற்காக தன்வாழ்வைச் சுருக்கிக்கொண்ட அன்னையின் தியாகம் நாட்டுப்பற்றாளர் தினம் என்று, தமிழீழத் தேசியத் தலைமையினால் பிரகடனப்படுத்தப்பட்டது.

தமிழினம் வாழத் தன் இன்னுயிர் ஈந்த அன்னையின் பெயரால், நோர்வேயில் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் கிளைபரப்பி, பெருவிருட்சமாக வளர்ந்து நிற்கின்றது. இத் தமிழ்க்கலைக்கூடம் மொழி, கலை, தேசப்பற்று, விளையாட்டென அனைத்தையும் வழங்கிடும் கற்பகதருவாக விளங்குகின்றது. அன்னையின் தியாகம் எம் மனதை விட்டு என்றுமே அகலாது.

நன்றி - வணக்கம்

**அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.**
**அனைத்து மாணவர்களையும் ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை.**
**மாணவர்களை தயார்படுத்துவது பெற்றோரின் கடமை.**